2011 ஜூன் 9]

## 1. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

### (உ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)—ன்கீழ், ஆளுநர் உரை மீதான விவாதத்தைத் தள்ளிவைத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

*முற்பகல் 10—05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"சட்டமன்றப் பேரவை விதி 13 (2)—ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து இன்று முன்மொழியப்பெறும் அரசினர் தனித் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

## 3. அரசினர் தனித் தீர்மானம்

### கச்சத் தீவு தொடர்பான வழக்கில் தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையையும் சேர்த்துக்கொள்ள உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

* **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களின் வாழ்வாதாரமாக விளங்கும் கச்சத் தீவினை, 1974 மற்றும் 1976–ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட இந்திய–இலங்கை ஒப்பந்தங்களின்மூலம், இலங்கைக்குத் தாரை வார்த்ததை சட்ட விரோதமானது என அறிவிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் என்னால் தொடுக்கப்பட்ட வழக்கிற்கு, மேலும் வலு சேர்க்கும் வகையில் பின்வரும் தீர்மானத்தினை இன்று இப்பேரவையில் நான் முன்மொழிய விழைகிறேன்:*

## தீர்மானம்

*“இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை, நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு, இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும்” என 1960–ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் பெருபாரி வழக்கில் தீர்ப்பளித்தது. ஆனால், உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு முற்றிலும் முரணாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் இல்லாமல், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே 1974 மற்றும் 1976–ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் வாயிலாக, கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டு இருக்கிறது. இந்த ஒப்பந்தங்கள், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல என, 2008–ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழக்குத் தொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த வழக்கிற்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக, கச்சத் தீவு குறித்த அனைத்து ஆவணங்களையும் தன்வசம் வைத்துள்ள தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை, தன்னை இவ்வழக்கில் சேர்த்துக் கொள்ளும்படி, உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தீர்மானிக்கிறது”.*

*இந்தத் தீர்மானத்தின்மீது, அனைத்துக் கட்சிகளின் சார்பில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட பின்னர், எனது கருத்துக்களை நான் எடுத்துரைக்கிறேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2011 ஜூன் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தீர்மானத்தின்மீது விவாதம். கருத்து தெரிவிக்க விரும்பும் உறுப்பினர்கள், கட்சிக்கு ஒருவர் வீதம் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கின்றேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974–ஆம் ஆண்டு மற்றும் 1976–ஆம் ஆண்டுகளில் அன்றைய ஆட்சியில் இருந்தவர்கள், தமிழகத்தினுடைய எல்லையைக் காப்பாற்றுவதற்கு மைய அரசினிடத்திலே சரியான ஆதாரங்களை எடுத்து வைக்கத் தவறியதன் விளைவாக, வரலாற்று ரீதியாகத் தமிழகத்தினுடைய ஒரு பகுதியாக இருந்து வந்த கச்சத் தீவு, அன்று இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. அந்தக் கச்சத் தீவு தாரை வார்க்கப்பட்டதனுடைய விளைவாக, கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் தமிழக மீனவர்கள் 500–க்கும் மேற்பட்டவர்கள் சிங்கள இராணுவத்தால் படுகொலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இன்று ஆயிரக்கணக்கான கடலோர மீனவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது என்று சொன்னால், அது கச்சத் தீவு இலங்கை வசம் இருக்கின்ற காரணத்தினால்தான். இதை மீட்டெடுக்க வேண்டுமென்று தமிழகத்திலே பல்வேறு தரப்பிலேயிருந்து குரல் எழுப்பப்பட்டாலும்கூட, நமது மதிப்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கிலே தமிழக அரசினுடைய வருவாய்த் துறையும் இணைத்துக் கொள்ளப்படவேண்டும் என்ற தீர்மானம், நேற்று எவ்வாறு இலங்கைத் தமிழர்களுக்காகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோ, அதுபோல் இது இரண்டாவது மைல் கல் ஆகும் என்பதை நான் சுட்டிக்காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலேயே தனியாக ஒரு தீர்மானம் கொண்டுவந்தால் இன்னும் சிறப்புடையதாக இருக்கும் என்று கூறி இந்தத் தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. முத்துக்குமரன் அவர்கள்.*

[2011 ஜூன் 9

**திரு. ப. முத்துக்குமரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கச்சத் தீவை மீட்கக் கோருகிற இந்தத் தீர்மானத்தை முதலில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஏகமனதாக வரவேற்கிறது. கச்சத் தீவை இழந்த நம்முடைய தமிழக மீனவர்கள் தொடர்ந்து இன்றுவரை பெறுகிற அல்லலால், தமிழகத்தில் மீனவர்களுக்கு யார் பாதுகாப்புக் கொடுக்கமுடியும் என்ற ஏக்கத்தோடு இருக்கிற இந்த நேரத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் முன்மொழிந்திருப்பது மீனவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் மேலும் வலு சேர்க்கிற வகையிலே, கூடுதல் பலம் தருகின்ற வகையிலே, அமைந்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம்.

கச்சத் தீவில் மீன் பிடிக்கிற உரிமை என்பது, தமிழக மீனவர்கள் நாடு, தேசம் என்று ஒரு வரையறை இருக்கிற காலத்திற்கு முன்பே பெற்றிருந்ததாகும். அந்த மீன்பிடி உரிமையைப் பறிகொடுத்து நிற்கக்கூடிய நேரத்தில், இந்தத் தீர்மானத்தை இங்கு முன்வைத்திருப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

மேற்கு வங்க மாநிலத்தில் இருந்த ஒரு மீன்பிடிப் பகுதியை, பாகிஸ்தான் நாட்டிற்குக் கொடுத்ததைத் திரும்பவும் பெறுகிற நல்ல நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். பாகிஸ்தானிடமிருந்து மீண்டும் அது திரும்பப் பெறப்பட்டிருக்கிறது. அந்த முன்னுதாரணத்தையும் இந்த நேரத்தில் கவனத்திலேகொண்டு, இந்தத் தீர்மானத்தின் வாயிலாக, கச்சத் தீவைத் திரும்பப் பெற்றாக வேண்டும். கச்சத் தீவில் மீன் பிடிக்கிற பகுதி என்பது, தமிழகத்தில் இருக்கிற மீனவர்களுக்குத்தான் அதிக உரிமை கொண்டதாகும். இன்றைக்கு இருக்கக்கூடிய நம்முடைய பேரவை உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுகிற வகையில், அந்த மீன்பிடி உரிமையைப் பெற்று தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால், ஏதோ மேலோட்டமாக சொல்லக்கூடிய வார்த்தைகளோடு நின்றுகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையெல்லாம் மாறி, இந்தத் தீர்மானத்தின் வாயிலாகத் தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்டுவதற்கு இந்த ஒரு தீர்மானத்தின் வாயிலாகத்தான் மீனவர்களைப் பாதுகாக்கமுடியும் என்பதையும் இந்த நேரத்திலே இந்திய கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

2011 ஜூன் 9] [திரு. ப. முத்துக்குமரன்]

எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜகதாப்பட்டினம், கோட்டைப்பட்டினம் பகுதியிலேயிருந்து மீன் பிடிக்கச் செல்கிற அதிகப்படியான மீனவர்கள் படுகொலைக்கும், துன்புறுத்தலுக்கும் தொடர்ந்து ஆளாக்கப்பட்டு, இன்னும் நூற்றுக்கும் மேற்பட்டவர்களுடைய வாழ்நிலை என்ன ஆனது என்று தெரியாத சூழலும் இருக்கிறது.

இந்த நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். சர்வதேச அளவில் தமிழகத்திலே இருக்கக்கூடிய அச்சுறுத்தல்கள், பல்வேறு தீவிரவாத நடவடிக்கைகளெல்லாம் கச்சத் தீவின் வாயிலாகத் தமிழகத்திற்குள்ளே ஊடுருவுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. அமைதியான தமிழகத்தை ஏற்படுத்துவதற்கும் இந்தத் தீர்மானம்தான் இன்றைக்கு முன்னுதாரணமாக இருக்கிறது என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக மீனவர்கள் மீன் பிடிக்க வழக்கமாக அவர்கள் சென்று கொண்டிருக்கக்கூடிய பகுதிக்குச் சென்று கொண்டிருக்கும்போது—ஏற்கெனவே இலங்கையில் இன மோதல்கள் நடந்து கொண்டிருந்த நேரத்தில், அதைச் சாக்காக்கி—நம்முடைய மீனவர்கள் வேட்டையாடப்பட்டார்கள். இப்போது அங்கு போர் இல்லை என்கிற நிலையில், ஏற்கெனவே அவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்த எல்லை அளவிற்கு மீன் பிடிக்க அனுமதிக்கவேண்டும். அப்படி அனுமதிக்காவிட்டால் நம்முடைய மீனவர்களுக்கு உரிய மீன் கிடைக்காது. அதுதான் இப்போது நம்முடைய மீனவர்களுடைய மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கிறது.

ஏற்கெனவே மீனவர்கள் மீன் பிடிக்கிற எல்லை அளவிற்குச் செல்கிற வாய்ப்புகூட "மீன் பிடிக்கும் உரிமைகூட இல்லை. இலங்கை மீனவர்கள் நம் பகுதியிலே எங்காவது மீன் பிடிக்க வரவேண்டுமென்றாலும்கூட, அதை அனுமதித்தால்கூட தவறில்லை; ஆனால், நாங்கள் மீன் பிடிக்கச் செல்கிற பகுதிக்கு

அனுமதிக்க வேண்டும்" என்று நம் மீனவர்கள் கேட்கிறார்கள். அதுதான் அவர்களுடைய வாழ்வுப் பிரச்சினையாகவும் இருக்கிறது. இப்போது மீன் பிடிக்கச் செல்லக்கூடிய நம்முடைய மீனவர்களை, "நீங்கள் எங்கள் நீர் எல்லையைக் கடந்துவிட்டீர்கள்" என்று மீண்டும் கொல்லப்படுகிற அநியாயம் நடைபெறுகின்றது. ஆகவே, இது மீனவர்களின் வாழ்வுரிமைப் பிரச்சினை என்கிற வகையில் அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து, நம்முடைய மீனவர்கள் மீன் பிடிக்கும் உரிமையை, ஏற்கெனவே அவர்கள் சென்ற எல்லைவரை செல்லுகிற வாய்ப்பை, உருவாக்குவதற்கு நாம் முன்னுரிமை கொடுத்துச் செயல்படவேண்டும். ஆகவே, அந்த அடிப்படை நோக்கத்தை முழுக்க முழுக்க நாங்கள் வரவேற்கிறோம்.

*முற்பகல் 10–15*

நம்முடைய இரண்டு அரசுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கிற ஒரு ஒப்பந்தம் என்கிற வகையில், அந்த ஒப்பந்தத்தில் கச்சத் தீவு தாரை வார்க்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள், அண்ணா தி.மு.க–வின் பொதுச் செயலாளர் என்ற வகையிலே வழக்குத் தொடுத்திருக்கிறார்கள். இப்போது நம்முடைய வருவாய்த் துறையை இதிலே இணைத்துக் கொள்வது என்பது, முதலமைச்சர் என்கிற வகையிலே அவர்களே தானாகவே செய்யத்தக்க ஒரு காரியம்; அதற்கு மன்றத்தினுடைய அனுமதி தேவையில்லை என்று நான் கருதுகிறேன். அந்த அடிப்படையிலே வருவாய்த் துறையை, அரசு என்கிற வகையிலே அந்த வழக்கிலே இணைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

*__முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் தலைமையிலான தமிழக அரசு, தொடக்கத்திலிருந்தே மீனவர்களுடைய நலனைப் பேணுவதிலே அக்கறை கொண்டு பல்வேறு அறிவிப்புகளையும், நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது. அந்த அடிப்படையிலே 1974–இலே தமிழகத்தில் தி.மு.க. அரசும், மத்தியிலே காங்கிரஸ் அரசும் ஆட்சியிலே இருந்தபோது, காலங்காலமாக இராமநாதபுரம் சேதுபதி மன்னருக்குச் சொந்தமாக இருந்து விடுதலை பெற்ற

*பிறகு, நமது நாட்டின் சொத்தாக மாறிய கச்சத் தீவைத் தாரை வார்த்துவிட்டார்கள். எனக்கு முன்னர் இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல, கச்சத் தீவைத் தாரை வார்த்தது, நம்முடைய தமிழக மீனவர்களுக்கு, குறிப்பாக இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களுக்கு மிகப் பெரிய இழப்பாகும் ...*

## 2. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

### (ஆ) செல்லிடத் தொலைபேசியை அவையில் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன, மாமன்றத்தில் செல்ஃபோனை உபயோகிக்கக்கூடாது,* off *செய்ய வேண்டுமென்று. அதையும் மீறி, திரும்பத் திரும்ப மணி அடித்துக் கொண்டிருப்பது மிகவும் கண்டனத்திற்குரியது. இனிமேல் தயவுசெய்து மாமன்ற உறுப்பினர்கள் செல்ஃபோனை* off *செய்துவிட்டு பேரவைக்குள் வரவேண்டும். இல்லையென்றால், அந்த செல்ஃபோன் பறிமுதல் செய்யப்படும் ஒரு சூழ்நிலை ஏற்படும்.*

## 3. அரசினர் தனித் தீர்மானம்—*தொடர்ச்சி*

### கச்சத் தீவு தொடர்பான வழக்கில் தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையையும் சேர்த்துக் கொள்ள உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தல்—*தொடர்ச்சி*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடம் நம்முடைய மீனவர்களுடைய உயிருக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய ஒரு பிரச்சினையாக, கச்சத் தீவைத் தாரை வார்த்த பிரச்சினை அமைந்திருக்கின்றது. இதில் மிக முக்கியமாக ஒரு விஷயத்தை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். கச்சத் தீவு தொடர்பான சட்டத்திலே கச்சத் தீவுக்குச் செல்வதற்கும், அந்தப் பகுதியிலே மீன் பிடிப்பதற்கும், ஏன் அந்தத் தீவிலே மீன் வலைகளைக் காய வைப்பதற்கும்கூட தாரை வார்ப்புச் சட்டத்திலே உரிமை இருந்தாலும்கூட, இலங்கையிலே தமிழ் மக்களுக்கு எதிரான போர் நடைபெற்றிருந்த காலத்திலே, 1983–லே* Tamil Nadu Marine Fisheries Act *என்ற ஒரு சட்டத்தின் வாயிலாக நம்முடைய*

Maritime Boundary மாற்றப்பட்டு, கச்சத் தீவுக்கு நாம் செல்லக்கூடிய உரிமை தடுக்கப்பட்ட ஒரு சூழல் ஏற்பட்டுவிட்டது.

இப்போது போர் முடிவுற்ற நிலையிலே, இந்தச் சட்டத்தையும் திருத்தி நம்முடைய மீனவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி, தமிழக அரசு கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தை மனதார ஆதரித்து விடைபெறுகிறேன். நன்றி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

*** திரு. விஜயகாந்த்:** *மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்திற்கு நாங்கள் முழுமனதோடு ஆதரவு தெரிவிக்கிறோம். (மேசையை,த் தட்டும் ஒலி) கச்சத் தீவைப் பற்றி சில கருத்துகளைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். ஏனென்றால், மதுரையிலே பிறந்து, மதுரையிலே வாழ்ந்ததனாலே சொல்கிறேன். கச்சத் தீவிலே அன்றைக்குப் பண்டமாற்று முறை இருந்தது. அந்தப் பண்டமாற்று முறை நடந்த இடத்திற்கு நான் போயிருக்கிறேன். பண்டமாற்று முறை அங்கே நடக்கும்போது எந்த அளவிற்கு ஒரு சுதந்திரம் இருந்ததோ, அந்த அளவிற்கு இப்போது சுதந்திரம் கிடையாது. அன்றைக்குக் கச்சத் தீவிலே மீனவர்கள் வலையைக் காய வைப்பதற்கும், மீன்களைக் காய வைப்பதற்கும் நம்முடைய இந்திய அரசாங்கம் சுதந்திரம் கொடுத்திருந்தது. ஆனால், அது இன்றைக்குக் கிடையாது. மக்களின் குறைகளை அறிந்து நடப்பதுதான் ஜனநாயகம். ஆனால் கச்சத் தீவைத் தாரை வார்த்துக் கொடுக்கும்போது, இந்த அரசாங்கம் அங்குள்ள மீனவர்களின் குறைகளைக் கேட்கவில்லை. இது என்ன ஜனநாயகம் என்று எனக்குப் புரியவில்லை.*

*முற்பகல் 10–20*

*இன்றோ அல்லது நேற்றோ நான் டி.வி.–யிலும், பேப்பரிலும் செய்தியைப் படித்தேன். 1973–இல் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் கொண்டுவந்த ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் திராவிட முன்னேற்றக் கழக அரசு போட்ட பல சட்ட திட்டங்களை*

ஆதரித்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், 1972–இல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிரிந்து தனியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆரம்பித்தார்கள். ஆரம்பித்தவுடனேயே கலைஞர் மேலே 1974–இல் ஒரு ஊழல் புகார் கொடுக்கிறார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், மத்திய அரசிடம் போய் ஊழல் புகார் கொடுக்கிறார். "இந்த மாதிரி கலைஞர் ஒரு ஊழல் செய்திருக்கிறார்; அதிகமாக சொத்து சேர்த்திருக்கிறார்" என்று ஊழல் புகார் கொடுக்கிறார். எங்கே தன்னை ஊழல் வழக்கில் சேர்த்து விடுவார்களோ என்று பயந்துபோய்தான், இந்தக் கச்சத் தீவை அன்றைக்கு மத்திய அரசிடம் எதுவும் கேட்காமல் தாரை வார்த்துக் கொடுத்தவர்தான் இந்தக் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இதைச் சொல்கிறேனென்றால், வரலாறு படித்ததனால், படித்து எனக்குத் தெரிந்ததனால்தான், அன்றைய நிலையை அறிந்ததனால் இதையெல்லாம் பேசுகிறேன். அதேபோல, கச்சத் தீவுக்கு நான் போனதனால் இதையெல்லாம் பேசுகிறேன். இன்றைக்கு நான் கச்சத் தீவுக்கு அந்த மாதிரி போக முடியவில்லை; வர முடியவில்லை.

அன்றைக்கு மேற்கு வங்கத்திலே பி.சி. ராய் என்று ஒரு முதலமைச்சர் இருந்தார். மேற்கு வங்கத்திலிருந்து பெருபாரியைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு மேற்கு வங்கத்திலிருந்து பிரித்துக் கொடுக்க முடியாது; ஒரு நாட்டைப் பிரித்துக் கொடுப்பதற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே இடமில்லை என்று பி.சி. ராய் சொல்லிவிட்டார். இதையே வழக்கறிஞர் ஷேத்தல்வாத் அவர்களிடம் கச்சத்தீவு சம்பந்தமாக கேட்டபொழுது அவரும், "பிரிக்க முடியாது; நீங்கள் பாராளுமன்றத்திலே சட்டத்தை இயற்றி, இரு சபைகளின் ஒப்புதலையும் பெற்று வந்தால்தான் முடியும்" என்று கூறினர். அன்றைக்கு இருந்த முதலமைச்சர் பி.சி. ராய்க்கு இருந்த தைரியம் ஏன் முதல்வர் கலைஞருக்கு இல்லை என்பதுதான் கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று அன்றைக்கே பேசிவிட்டார்களே! இவர் அதிகமாக சொத்து சேர்த்துக்கொண்டு, ஊழல் வழக்கில் மாட்டக்கூடாது என்று கச்சத் தீவைத் தாரை வார்த்துக் கொடுத்தார். தாரை வார்த்துக்

[திரு. விஜயகாந்த்] [2011 ஜூன் 9

கொடுத்தார் என்பதைவிட, நாடாளுமன்றத்தில் எந்தவித தீர்மானமும் நிறைவேற்றப்படாமல் இந்தக் கச்சத் தீவைத் தாரை வார்த்துக் கொடுத்தார்கள். அன்றைக்கு அனைத்துக் கட்சிக் கூட்டம் என்று ஒரு தீர்மானத்தை சட்டமன்றத்திலே போட்டு, சும்மா கண் துடைப்பு நாடகம்தான் கலைஞர் நடத்தினாரே தவிர, வேறு எதுவும் நடத்தவில்லை. ஏன் இதைச் சொல்கிறேனென்றால், இந்தச் சட்டமன்றத்திற்கு அவர்களும் வருவார்கள், பேசலாம் என்று நினைத்தேன். அவர்கள் இன்றைக்கு வரவில்லை. இருந்தாலும், கச்சத் தீவு குறித்த உண்மை நிலைமை எல்லோருக்கும் புரிய வேண்டும் என்பதற்காகத்தான் பேசுகிறேன். அன்றைக்கு நான் மட்டுமே ஒரு எம்.எல்.ஏ.–வாக இருந்தபோது என்னால் பேச முடியவில்லை. ஆனால், அறிக்கைகளாக நான் கொடுத்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு எனக்குப் பேசக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் நான் பேசுகிறேன். அன்றைக்கு நான் பேசினாலும் அவர்கள் 'கட்' செய்து விடுவார்கள்; நிறுத்தி விடுவார்கள்; அதைப் பற்றி நான் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. இன்றைக்குக் கச்சத் தீவைப் பற்றி ஏன் இவ்வளவு தூரம் நான் சொல்கிறேன் என்றால்—இன்றைக்குக் கச்சத் தீவைப் பற்றி எல்லோரும் என்ன சொல்கிறார்களென்றால், அதாவது இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையே உள்ள தூரம் 22 மைல்தான். இதிலே என்ன எல்லையைப் பிரிப்பது என்பது எனக்குப் புரியவில்லை. அன்றைக்கு இவர்கள் தாரை வார்த்துக் கொடுத்தார்கள். இன்றைக்கு அதனால் கஷ்டப்படுபவர்கள் இந்திய மீனவர்கள்தான். நியாயமாகச் சொன்னால், இந்திய மீனவர்கள், அதிலும் தமிழ்நாட்டு மீனவர்கள் போனால் வலையை அறுத்து விடுகிறார்கள்; மானபங்கப்படுத்தப்படுகிறார்கள்; வேறு ஏதாவது பண்ணுகிறார்கள், இம்மாதிரியான விஷயங்கள் நடக்கின்றன. இலங்கையில் இருக்கிற கடற்படை, இதுதான் இலங்கையுடைய எல்லை என்று அவர்களுக்கு அறிவுறுத்துகிறார்கள். ஆனால், இங்கே இருக்கிறவர்கள் யாரும் நம்முடைய தமிழக மீனவர்களுக்கு அறிவுறுத்தாததினால்தான் இவ்வளவு பிரச்சினை. இது காலங்காலமாக நடந்து வருகிறது. காலங்காலமாக நடந்து வருகிற இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இன்றைக்கு வருவாய்த் துறையைக் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக ஏற்கெனவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர்

2011 ஜூன் 9] [திரு. விஜயகாந்த்]

வழக்குப் போட்டிருந்தாலும்கூட, திரும்பவும் வருவாய்த் துறையைச் சேர்க்க வேண்டும் என்று கொண்டு வந்துள்ள இத்தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதில் எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. தமிழக மீனவர்களுக்குக் கச்சத் தீவு திரும்ப வரவேண்டும். தினந்தோறும் செத்து மடிந்து கொண்டிருக்கிற மீனவர்களுக்கு, நல்ல விடிவு காலம் வர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்ஃப் தீவிற்கு தெற்கே 9 மைல் தொலைவிலும், இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே 10 மைல் தொலைவிலும் உள்ள பாக் ஜலசந்தி என்ற பகுதியில் கச்சத் தீவு அமைந்துள்ளது. ஓய்வெடுப்பதற்கும், வலைகளை உலர வைப்பதற்கும், பிடிபட்ட மீன்களை இனவாரியாக வகைப்படுத்துவதற்கும், மக்கள் வசிக்காத வறண்ட கச்சத் தீவை, பரம்பரைப் பரம்பரையாக, தமிழ்நாடு மீனவர்கள் பயன்படுத்தி வந்தனர்.

*முற்பகல் 10–25*

மீனவர்களின் புண்ணியப் புரவலராகக் கருதப்படும் புனித அந்தோணியாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட கத்தோலிக்க தேவாலயம் இந்தத் தீவில்தான் உள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சீனிகுப்பன் படையாச்சி என்பவர் இந்தத் தேவாலயத்தைக் கட்டினார். ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாத இறுதியில், வாரக் கணக்கில் நடக்கும் சமய விழாவில் கலந்து கொள்வதற்காக இந்தத் தீவிற்குத் தமிழக மீனவர்கள் செல்வது வழக்கம். இதுபோன்ற விழாக் காலத்தில் தொழுகை நடத்துவதற்காக, இராமேஸ்வரத்திற்கு அருகிலுள்ள தங்கச்சிமடத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மத குரு கச்சத் தீவிற்குச் செல்வது வழக்கம் என்று வரலாற்றுப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன.

1972–இல் வெளியிடப்பட்ட இராமநாதபுரம் மாவட்ட விவரச் சுவடி, அதற்குமுன் இராஜா இராமராவ் வெளியிட்ட இராமநாதபுர

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 9

மாவட்ட மானுவல் 1915, 1929 மற்றும் 1933 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட இராமநாதபுர மாவட்டத்துப் புள்ளிவிவரங்கள் அடங்கிய பின்னிணைப்பு, 1899–ல் ஏ.ஜெ. ஸ்டூவர்ட்டு எழுதிய சென்னை ராசதானியிலுள்ள திருநெல்வேலி மாவட்ட மானுவல் போன்ற பல்வேறு ஆதாரங்களைக் கொண்டு வெளியிடப்பட்டது. அதில் இராமேஸ்வரத்திற்கு வடகிழக்கே, 10 மைல் தொலைவில் கச்சத் தீவு இருக்கிறது என்றும், ஜமீன் ஒழிப்பிற்கு முன்னர், இராமநாதபுரம் அரசர் இத்தீவைத் தனி நபர்களுக்குக் குத்தகைக்கு விட்டுக் கொண்டிருந்தார் என்றும், இந்தத் தீவின் சர்வே எண் 1250; பரப்பளவு 285.20 ஏக்கர் என்றும், இந்தத் தீவு இராமேஸ்வரம் கர்ணத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் வட்டத்திலுள்ள தீவு என்று கச்சத் தீவை அது குறிக்கிறது. இவையெல்லாம் கச்சத் தீவு மீது இந்தியாவிற்கு உள்ள பறிக்க முடியாத உரிமைகளுக்குச் சான்றாக விளங்குகின்றன.

இந்த விவரச் சுவடி வெளியிடப்பட்டபோது, திரு. மு. கருணாநிதி தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தார். அந்த விவரச் சுவடியில் கச்சத் தீவு பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதிலிருந்த வரைபடத்தில் கச்சத் தீவு இந்தியாவின் பகுதி எனக் காண்பிக்கப்படவில்லை. ஆனாலும், இந்த விவரச் சுவடிக்கு 14–6–1972–இல் முகவுரை எழுதிய அப்போதைய முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி, அதைப்பற்றி விவரச் சுவடி தயாரித்த அதிகாரிகளிடம் எடுத்துக் கூறாமல், முகவுரை எழுதிக் கொடுத்துவிட்டார். இதுதான் கச்சத் தீவு மீது திரு. மு. கருணாநிதிக்கு இருந்த பற்று.

இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய கடலோர மாவட்டங்களில் வாழும் தமிழக மீனவர்கள், தொன்றுதொட்டு கச்சத் தீவின் அருகில் மீன் பிடித்து, அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தனர். 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக திரு. கருணாநிதி பதவி வகித்தபோது, அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டின்படி, இரு நாடுகளும் பரம்பரைப் பரம்பரையாகத் தங்கள் நாட்டிற்குச் சொந்தமான கடல் எல்லைகளில் எந்தெந்த உரிமைகளை அனுபவித்து வந்தனவோ, அந்தந்த உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் முதலமைச்சராக இருந்தபோது, கச்சத் தீவைத் திரும்பப் பெறுவதற்காகப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டேன். 15–8–1991 சுதந்திரத் தினத்தன்று தேசியக் கொடியைப் புனித ஜார்ஜ் கோட்டையில் ஏற்றி வைத்து, "கச்சத் தீவை மீட்போம்" என்று அறிவித்ததோடு மட்டுமல்லாமல், இதுகுறித்து பலமுறை மத்திய அரசையும், பாரதப் பிரதமரையும் நேரிலும், கடிதம் மூலமாகவும் வற்புறுத்தியிருக்கிறேன். 16–9–2004 அன்று "Lease in Perpetuity" – அதாவது, நிரந்தரமான குத்தகை என்ற முறையில், தமிழக மீனவர்கள் கச்சத் தீவிற்குச் சென்று மீன் பிடிக்கும் உரிமையை மத்திய அரசு பெற்றுத் தரவேண்டுமென்று பாரதப் பிரதமரை நேரில் சந்தித்தும் வலியுறுத்தியிருக்கிறேன். இருப்பினும், தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் எந்தவித நடவடிக்கையையும் மத்திய அரசு எடுக்கவில்லை.

முற்பகல் 10–30

2006–ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலையடுத்து, தமிழகத்தின் முதலமைச்சராக திரு. மு. கருணாநிதி பொறுப்பேற்றுக் கொண்டார். மத்தியிலும் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி நடைபெற்று வந்தது. எந்த மத்திய அரசும், மாநில தி.மு.க. அரசும், 1974–ஆம் ஆண்டு கச்சத் தீவைத் தாரை வார்த்துக் கொடுத்தனவோ, அதே அரசுகள் மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பை வகித்தன. ஆனால், கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. மாறாக, தமிழக மீனவர்களின் வலைகளை அறுத்தல், படகுகளைச் சேதப்படுத்துதல், அவர்களைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல், கழுத்தில் கயிற்றினால் சுருக்கிட்டுத் தமிழக மீனவர்களைக் கொல்லுதல் போன்ற ஈவு இரக்கமற்ற, மனிதாபிமானமற்ற செயல்களில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டனர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், உயிரைப் பணயம் வைத்துத் தொழில் செய்யக்கூடிய நிலைமைக்குத் தமிழக மீனவர்கள் தள்ளப்பட்டார்கள்.

மாநிலத்தில் தி.மு.க. ஆட்சி, மத்தியில் தி.மு.க. தயவில் காங்கிரஸ் ஆட்சி என்ற நிலை இருந்தபோதும் கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கையையோ அல்லது தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தும் தாக்குதலைத் தடுப்பதற்கான நடவடிக்கையையோ, அப்போதைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் திரு. கருணாநிதி எடுக்கவில்லை. கச்சத் தீவு,

இலங்கை அரசுக்குத் தாரை வார்க்கப்பட்டதன் விளைவாக, இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இதுவரை நூற்றுக்கணக்கான மீனவர்கள் பலியாகி இருக்கிறார்கள்.

1960–ஆம் ஆண்டுக்கு முன்பு, 1950–களில், மேற்கு வங்காளத்தில் உள்ள பெருபாரி என்ற பகுதியை அப்போதைய கிழக்கு பாகிஸ்தானுக்குக் கொடுக்க மத்திய அரசு முயன்றபோது, அதை மேற்கு வங்க மாநில அரசு எதிர்த்ததோடு மட்டுமல்லாமல், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. அப்போதைய மேற்கு வங்க மாநில முதலமைச்சர் திரு. B.C. ராய், இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், "இந்திய நாட்டுக்குச் சொந்தமான ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்குக் கொடுப்பது தொடர்பான உடன்பாட்டை நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலோடு இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின்மூலம் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும்" என 1960 ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. மேற்கு வங்க அரசின் இந்த சமயோசித நடவடிக்கை காரணமாக, அதாவது, அன்றைய மேற்கு வங்க முதலமைச்சர் திரு. B.C. ராய் அவர்களின் சமயோசித நடவடிக்கை காரணமாக, பெருபாரி பகுதி இன்றும் இந்திய நாட்டின் ஒரு பகுதியாக இருந்து வருகிறது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பினை மேற்கோள்காட்டி, 1974-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் மனு செய்திருந்தால், கச்சத் தீவு இன்றும்கூட, இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்திருக்கும். ஆனால், அன்றைய தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த திரு. மு. கருணாநிதி இதைச் செய்யத் தவறிவிட்டார்.

1974–இல் இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவது குறித்து அன்றைய முதல்வர் திரு. மு. கருணாநிதிக்குத் தெரியும் என்றும், அதை அவர் ஏன் எதிர்க்கவில்லை என்றும் நான் பலமுறை கேள்வி எழுப்பி உள்ளேன். ஆனால், திரு. மு. கருணாநிதியோ 1974–இல் ஒப்பந்தம் போடுவதற்கு முன்னால் தனக்கு இதுபற்றி தெரியாது என்றுதான் கூறிக்கொண்டு வருகிறார். திரு. கருணாநிதியின் இந்தக் கூற்றில் எள்ளளவும் உண்மை இல்லை என்பதை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

23–7–1974–இல் மாநிலங்களவையில் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்போது, "...I would like to get a clarification in this regard from the Hon. Minister. Just now I heard the views expressed

2011 ஜூன் 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

by my Hon'ble friend, Mr. S.S. Mariswamy, D.M.K., that in the agreement reached between the Government of India and the Sri Lanka Government, the Government of Tamil Nadu was not properly informed.

. . . There are two news items which appeared in 'The Hindu'. One was on June 27:–

'When pressmen asked the Tamil Nadu Chief Minister Mr. Karunanidhi, for his reaction to the agreement on Kachatheevu, he said he would prefer to wait until after the details had been announced. Mr. Karunanidhi said that Foreign Secretary, Mr. Kewal Singh, had met him last week during his visit to Madras and apprised him on the situation. Mr. Kewal Singh had told him that a favourable condition existed for agreement on Kachatheevu.'

On the 29th June, the Chief Minister stated the following to the Press:–

'It was regrettable that before signing the agreement, the Centre had not invited him or any representative of the State Government for consultation. The Prime Minister had not even chosen to ascertain the views of the leaders of Parliament on this vital question'."

என்று தெரிவித்து, இதில் எது சரி என்று வினவுகிறார். இதற்கு Thiru Bhupesh Gupta அவர்கள், "We know it for a fact that the State was consulted" என்று கூறியுள்ளார்.

முற்பகல் 10–35

இதுகுறித்து, 21–8–1974 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், கச்சத் தீவு குறித்து கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது, "மத்திய அரசு உங்களோடு ஆலோசனை நடத்தியதா?" என்று திரு. ஆலடி அருணா, முன்னாள் முதல்வர் திரு. கருணாநிதி அவர்களைக் கேட்டபோது, திரு. கருணாநிதி, "வெளியுறவுத் துறைச் செயலாளர் கேவல் சிங் அவர்களை நான் டெல்லியில் சந்தித்தபோது இதைப்பற்றி அவர் என்னிடம் பேசினார். இதை ஆலோசனை என்று வைத்துக் கொண்டாலுங்கூட, நான் அவரிடம் சொன்னது: "தமிழ் மக்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்;

தமிழக அரசு இதை ஏற்றுக்கொள்ளாது. கச்சத் தீவு இந்தியாவுக்கே, தமிழகத்திற்குச் சொந்தமாக இருக்கவேண்டும் என்று எடுத்துச்சொல்லி, மறுநாள் பிரதமரைச் சந்தித்தபோது, இதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொன்னேன்" என்று கூறியுள்ளார். அப்போது, ஆலடி அருணா, நாடாளுமன்றத்தில் ஸ்வரண் சிங் அவர்கள் பேசியதை எடுத்துச் சொல்கிறார்:

"The External Affairs Minister, Shri Swaran Singh said in Rajya Sabha today that very detailed consultations had been held with the Chief Minister of Tamil Nadu Mr. Karunanidhi by the Government of India on the issue of Kachatheevu. The consultations were held at least twice."

அதற்கு விளக்கம் அளித்து, திரு. மு. கருணாநிதி, ஸ்வரண் சிங் மேலும் என்ன சொன்னார் என்று குறிப்பிடும்போது, "May I say, because others might pick up – I would like to say categorically, that we had very detailed consultations with the Chief Minister Shri Karunanidhi of Tamil Nadu, not once, but at least two times." உடனே ரபிராய் என்ற உறுப்பினர் எழுந்திருந்து, "Had he agreed?" என்று கேட்டார். உடனே அமைச்சர் ஸ்வரண் சிங் அவர்கள் சொல்கிறார்– "the point raised was about consultation" என்று சொல்லி, தந்திரமாகத் தப்பித்துக் கொள்கிறார். தந்திரமாகத் தப்பித்துக் கொண்டது திரு. ஸ்வரண் சிங்கோ, மத்திய அரசோ அல்ல; கச்சத் தீவைத் தாரை வார்க்க துணைபோன திரு. கருணாநிதிதான் தந்திரமாகத் தப்பித்துக் கொண்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலில் "consultation" இல்லை; அதாவது ஆலோசனை கேட்கவில்லை என்று சொன்னவர், பின்னர் "consent" கொடுக்கவில்லை, அதாவது ஒப்புதல் அளிக்கவில்லை என்று கூறி தப்பித்துக் கொண்டுவிட்டார்.

கச்சத் தீவை இலங்கையிடம் இந்தியா ஒப்படைக்கும் முன்பு, மத்திய அரசு தமிழக அரசிடம் பல முறை விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது என்பது தெளிவாகிறது. உண்மையிலேயே, திரு. கருணாநிதிக்குத் தமிழக மீனவர்கள்மீது அக்கறை இருந்திருந்தால், இந்திய–இலங்கை உடன்பாடு கையெழுத்தாவதற்கு முன்பே, சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி மிகப் பெரிய போராட்டத்தை நடத்தியிருக்க

2011 ஜூன் 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வேண்டும். ஆனால், அதைச் செய்யத் தவறிவிட்டார் முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி. சட்டமன்றத் தீர்மானத்தில்கூட மத்திய அரசு செய்துகொண்ட ஒப்பந்தம், "வருத்தம் அளிக்கிறது" என்றுதான் திரு. கருணாநிதி குறிப்பிட்டிருக்கிறாரே தவிர, "எதிர்க்கிறோம்" என்ற சொல் எங்கேயும் இடம் பெறவில்லை. இந்தத் தீர்மானம், ஏதோ சம்பிரதாயத்திற்காக, சமாதானத் தொனியில், நிறைவேற்றப்பட்ட தீர்மானம் போல்தான் இருக்கிறதே தவிர, இழந்த உரிமையை மீட்கக்கூடிய போராட்டத் தொனியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் போல் இல்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், திரை மறைவில் கச்சத் தீவை காவு கொடுப்பதற்கு ஒப்புதல் அளித்துவிட்டு, கண்துடைப்பு நாடகமாகத் தீர்மானத்தை முன்மொழிந்தவர் திரு. கருணாநிதி என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தான் செய்த துரோகத்திற்குப் பரிகாரம் காணும்வகையில், 2006 முதல் 2011 வரை, மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்தபோது, "தமிழக மீனவர்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து நடத்தினால், கடும் விளைவுகளை இலங்கை சந்திக்க நேரிடும்" என்று மத்திய அரசின் மூலம் இலங்கை அரசை எச்சரிக்கை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், அதைச் செய்யவில்லை. மாறாக, இலங்கையில் தமிழ் இனம் அழிவதற்குத் துணை போனார் திரு. கருணாநிதி.

நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியபடி, நான் எடுத்த பல்வேறு முயற்சிகளின் காரணமாக, கச்சத் தீவில் மீன் பிடிக்கும் உரிமை, நமது மீனவர்களுக்குக் கிடைக்காத நிலையில், 2008–ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்த 1974 மற்றும் 1976 ஆண்டைய ஒப்பந்தங்கள் 'சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல' என்று உத்தரவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்திருந்தேன். இந்த வழக்கில் மத்திய அரசுடன் தமிழ்நாடு அரசையும் ஒரு பிரதிவாதியாகச் சேர்த்திருந்தேன். இந்த வழக்கு 6–5–2009 அன்று உச்ச நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்காகப்

பட்டியல் இடப்பட்டபோது, மீன்வளத் துறை ஆணையரால் தமிழக அரசுக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கையில் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அதில் ஒரு கருத்தாக "...uniform stand has to be taken both by the Central and State Governments" என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது, மத்திய அரசும், மாநில அரசும் ஒரே நிலையை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

*முற்பகல் 10–40*

இந்த வழக்கிற்குப் பத்திவாரிக் குறிப்புகள் வைத்து, அதற்கு ஒப்புதல் கேட்டு 10–6–2009 அன்று அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதிக்குக் கோப்பு அனுப்பப்பட்டது. அந்தக் கோப்பினைச் சட்டத் துறை மூலமாக அனுப்பும்படி முதலமைச்சரின் செயலாளர் 13–7–2009 அன்று திருப்பிவிடுகிறார்.

சட்டத் துறை தனது குறிப்பில் தமிழக அரசுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் எந்தவித வேண்டுகோளும் வைக்கப்படவில்லை என்றும், தமிழக அரசை ஒரு proforma respondent என்ற அளவில்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்து, மத்திய அரசின் எதிர் உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டபின் அதையே பின்பற்றலாமா, அல்லது நம்முடைய நிலைப்பாடு பற்றி உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கலாமா என்பது குறித்து உரிய நேரத்தில் முடிவெடுத்துக்கொள்ளலாம் என்று கூறியுள்ளது. இந்தக் கருத்தை உள்ளடக்கி இந்த நிலைப்பாட்டை உச்ச நீதிமன்றத்தில் உள்ள தமிழக அரசின் Advocate on Record–க்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகச் சுற்றோட்டக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பிற்கு 14–8–2009–இல் முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த வழக்கிற்கான பத்திவாரி அறிக்கையில், 1974 மற்றும் 1976-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் ஷரத்து எண் 8–இன்படி, நாடாளுமன்றத்தின் பின்னேற்பு ஆணை பெறப்படாதது; சட்டத்திற்குச் சட்டத் திருத்தம் செய்யப்படாதது குறித்து வாதி எழுப்பிய வினாக்களுக்கு மத்திய அரசுதான் தெளிவுரை வழங்கிட இயலும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, இந்த ஒப்பந்தம் செல்லத்தக்கது என்பதே முந்தைய தி.மு.க. அரசின் நிலைப்பாடாக இருந்தது.

2011 ஜூன் 9] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கச்சத் தீவை மீட்க வேண்டும்; தமிழக மீனவர்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கு உண்மையிலேயே அக்கறை இருந்திருக்குமானால், தன்னுடைய கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் உடனே எதிர் உறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை. தமிழக மீனவர்களின் நலன் காக்க நடவடிக்கை எடுக்க மனம் இல்லாததால்தான், மத்திய அரசு எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்தபின் மாநில அரசு தாக்கல் செய்யலாம் என்று முடிவெடுத்துவிட்டார் திரு. கருணாநிதி.

1–4–2011 அன்று 2 மாதங்களுக்கு முன் மத்திய அரசு, உச்ச நீதிமன்றத்தில் எதிர் உறுதி ஆவணத்தைத் தாக்கல் செய்தது. அதில் 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட ஒப்பந்தங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டியது இல்லை என்றும், என்னுடைய ரிட் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

“தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ முடியும். தமிழர் வாழ்ந்தால்தான் தமிழ்ச் சமுதாயம் வாழ முடியும்” என்று கூறியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். தமிழன் அழிந்தாலும் பரவாயில்லை; தன் சமுதாயம் வாழ்ந்தால் போதும் என்பதை நிகழ்த்திக் காட்டியவர் “அண்ணாவின் பாசறையில் வளர்ந்தவர்” என்று தனக்குத் தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சுட்டிக்காட்டி, கச்சத் தீவு குறித்த வழக்கில் தமிழக மீனவர்களுக்குச் சாதகமான தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் அளிக்க வகை செய்யும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள இத்தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2011 ஜூன் 9

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை எனக் கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். முதலில் திரு. இரா. காமராஜ் அவர்கள். உங்களுக்கு உரையாற்ற ஒதுக்கப்பட்ட நேரம் 20 நிமிடங்கள்.*

*முற்பகல் 10—45*

*__திரு. இரா. காமராஜ்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி மீது வெற்றி வந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையே சேரும். அந்த வெற்றியை வாங்கித் தருகின்ற பெருமையெல்லாம் எங்கள் அம்மா புரட்சித் தலைவி அவர்களை மட்டுமே சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற வரலாற்றுக்குச் சொந்தக்காரர். 1½ கோடி கழகத் தொண்டர்கள் மட்டுமல்லாமல், உலகத்திலே வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழர்கள், உள்ளத்தால், உணர்வுகளால் அம்மா, அம்மா, அம்மா என்று அடிவயிற்றிலிருந்து அன்போடு அழைக்கின்ற எங்கள் அன்புத் தாய்.*

*"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே*
*காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே*
*மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே"*

*என்கின்ற வள்ளலாரின் வாய்மொழியை உள்வாங்கிய எங்கள் உன்னத தலைவியை, திராவிடப் பண்ணையின் நறுமலரை, ஏழைகளின் எழில் நகையை, காலம் நமக்காக ஒதுக்கிய கருணைத் தொகுப்பை, மூடுபனி வைகறையின் முகத் திரையைக் கிழியுமுன், மக்களின் நலனே என் நலன் என அக்கறை கொண்டு உழைத்திடும் எங்கள் தலைவியை, எந்த இராஜ திராவகத்திலும் கரைந்து*